எண். 107/2026 நாள்: 09.09.2026

தமிழ் நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்
எண்.3, தேர்வாணையச் சாலை, சென்னை – 600 003
செய்தி வெளியீடு

ஒருங்கிணைந்த தொழில் நுட்ப பணிகள் தேர்வில் (பட்டயம்/ தொழிற்பயிற்சி நிலை) (அறிவிக்கை எண். 11/2024 மற்றும் அதன் பிற்சேர்க்கைகள்) அடங்கிய பதவிகளில், 9 பதவிகளுக்கான தேர்வு முடிவுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மேல்முறையீட்டு எண். 3782/2024–ல், 16.06.2026 அன்று பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில், தேர்வர்களின் மதிப்பெண் மற்றும் தரவரிசை விவரங்கள் 07.07.2026 அன்று தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டது.

ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகளில் (பட்டயம்/ தொழிற்பயிற்சி நிலை) அடங்கிய கீழ்கண்ட பதவிகளுக்கான பத்தாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், எண். 3, தேர்வாணையச் சாலை, (பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் கோட்டை ரயில் நிலையம் அருகில்) சென்னை – 600 003 ல் உள்ள தேர்வாணைய அலுவலகத்தில் 17.09.2026 முதல் 21.09.2026 வரை நடைபெற உள்ளது.

மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கான பதவி குறியீடுகள்	**அளவர்:** 3378,3545 & 3551 **நில அளவர்**: 3444, 3445, 3446, 3447, 3448, 3449, 3450, 3452, 3453, 3455, 3456, 3458 3459, 3460, 3461, 3462, 3463, 3464, 3465, 3466, 3467, 3468, 3469, 3471, 3472, 3473, 3474, 3475, 3476, 3477 3478, 3479, 3480, 3481

தேர்வர்களின் மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை எண் / இடஒதுக்கீட்டு விதி / காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு அழைக்கப்படும் தற்காலிக தேர்வர்களின் பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

பத்தாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கான நாள், நேரம் மற்றும் விவரங்கள் அடங்கிய அழைப்புக்குறிப்பாணையினை தேர்வர்கள் தேர்வாணைய இணையதளமான www.tnpsc.gov.in – லிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். பத்தாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு அழைக்கப்பட்ட தேர்வர்களுக்கு அதற்கான விவரம் SMS மற்றும் E–mail மூலம் மட்டுமே தெரிவிக்கப்படும். மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும்

கலந்தாய்விற்கான அழைப்பாணை தனியே தபால் மூலம் அனுப்பப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பத்தாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு அழைக்கப்பட்ட தேர்வர்கள் எழுத்துதேர்வில் அவரவர் பெற்ற மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை / இடஒதுக்கீட்டு விதிகள் / விண்ணப்பத்தில் அளித்துள்ள தகவல்கள் மற்றும் காலிப்பணியிடங்களுக்கு ஏற்ப மேற்படி பதவிகளுக்கான தெரிவு மேற்கொள்ளப்படும். எனவே, பத்தாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு அழைக்கப்படும் அனைவருக்கும் பணி வழங்கப்படும் என்பதற்கான உறுதி அளிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்வர்கள் மேற்படி பத்தாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு வரத்தவறினால் அவர்களுக்கு மறுவாய்ப்பு அளிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

திரு. பானோத் ம்ருகேந்தர் லால், இ.ஆ.ப.,
செயலாளர்